சைவ அசைவ அடிப்படையில்!

REDG. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆடி மீ 4வ திங்கள் (19—7—54) வெளியூர்: ஆடி மீ 5வ செவ்வாய் (20—7—54)	மலர்: 2 இதழ்: 30	

மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமாம்!

விசித்திர சித்தரின் விநோத வாதம்!

திருத்தக் குழுவிடம் ஐதராபாத் பேராசிரியர் கூறிய விந்தை மொழி!

தங்களுடைய பொருளாதாரச் சுரண்டலுக்கும், நிர்வாக வசதிக்கும் ஒத்த வகையில் இந்தியாவை மனம் போன போக்கில் பிரிட்டிஷார் பல மாநிலங்களாகப் பிரித்துவிட்டனர். எனவே மொழியை அடிப்படையாகக் கொண்டு, ஒழுங்கற்ற அமைப்பாக இருந்துவரும் மாநிலங்களை, ஒழுங்குபட திருத்தி அமைக்க வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியின் உறுதியான—முன்னாள் கோட்பாடு. அதற்கு எடுத்துக்காட்டாக, தனது கட்சி அமைப்பையே மொழி வழியில் உருவாக்கி இயங்கி வந்தது—வருகிறது—காங்கிரஸ்.

அந்தக் கோள்கை மீது, எது காரணம் பற்றியோ காங்கிரசுக்கு வெறுப்புத் தட்டிவிட்டது. மனமாற்றத்திற்கான காரணம் இன்னமும் விளக்கப்படவில்லை.

வெள்ளை ஏகாதிபத்தியம் போலவே, டில்லி ஆதிபத்தியமும் நிர்வாகம், பொருளாதாரம் போன்றவற்றை முன்தள்ளி, மொழியைப் புறக்கடையில் ஒதுக்கி வைத்து, மாநிலங்களைத் திருத்துவதற்காக என, ஒரு திருத்தக் குழுவை நியமித்து இருக்கிறது.

அக்குழுவிடம் கருத்து அறிவிப்பவர் பலரும், பற்பல விதமாகக் கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

திருத்தக் குழுவிடம் கருத்தறிவிக்கும் பலருள், ஐதராபாத்தைச் சேர்ந்த ஒரு பொருளாதார பேராசிரியரும் ஒருவராவர். மற்றவர்கள் எல்லாம் கூறினவற்றிற்கு மாறாக, மொழி வழியில் மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் கோரிக்கையை கைபாண்டி செய்யும் வகையில் விசித்திரமான கருத்தை, அந்த வித்தையான பேராசிரியர், திருத்தக் குழுவிடமும் குறிப்பிட்டுள்ளார். அந்த விசித்திர சித்தர்.

மாநிலங்களைத் திருத்தி அமைப்பதிலும், மரக்கறி உணவு கொள்வோர்—மாமிச உணவு கொள்வோர் வாழும் பகுதிகள் என்றப் பிரச்னையை கருதத்தக்க மூலக் கோட்பாடாகக் கொண்டு, திருத்தக் குழு, ஆராய்ந்து பார்க்க வேண்டுமென, அந்த விசித்திரப் பிறவி, குழுவிடம் கேலியாக முறையிட்டு இருக்கிறது.

அதாவது மரக்கறி மட்டுமே உண்ணும் சைவர் வாழும் பகுதி, மாமிசத்தையும் உணவாகக் கொள்ளும் அசைவர் வாழும் பகுதி என்ற அடிப்படையில், மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென, அந்த ஐதராபாத் விகடரான எஸ். கேசவ அய்யங்கார் அபிப்பிராயம் கோரேத்துள்ளார்.

அதற்கான புள்ளி விவரம் தம்மிடம் கிடையாது எனவும், இருந்தாலும் மரக்கறி உண்போர் பெரும்பான்மையினராக வாழும் பகுதியும், மாமிசம் உண்போர் அதிகமாக வாழும் பகுதியும் உள்ளன என்பதை அவர் வற்புறுத்திக் கூறி இருக்கிறார்.

ஐதராபாத்தை மொழிவழியில் பிரிப்பது பற்றி, ஒற்றுமை எனச் சொல்லப்படுவது இந்தியாவின் ஒற்றுமை என்ற அடிப்படையில் கருதப்பட வேண்டுமேயல்லாது, குறிப்பிட்ட மாநிலத்தின் ஒற்றுமை எனக் கொள்ளக் கூடாது எனவும், மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கையே, நிர்வாகத் துறையைப் பற்றி எழுந்தது பிரச்னையேயல்லாது அரசியல் துறை பற்றி எழுந்த விவகாரம் அல்ல எனவும், அந்தப் பேராசிரியர் அய்யங்கார் கருதுகிறார்.

"அரசியல் உரிமையும் செல்வப் பெருக்கமும் மட்டும் போதா!"

அறிவுத் தெளிவும் உள்ள உரமும் தேவை!'

'எல்லையில் உள்ள தோழர்களுக்கு பொறுப்பு அதிகம்!'

பொதட்டூர்பேட்டை மாநாட்டில் நெடுஞ்செழியன் கருத்துரை

"இந்த எல்லைப் பகுதிகளிலே வாழ்கிற நமது கழகத் தோழர்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. ஆந்திர எல்லையில் உள்ள சித்தூரிலும், கன்னடத்தில் உள்ள பெங்களூரிலும், கேரள எல்லையில் உள்ள நாஞ்சில் பகுதிகளிலும் உள்ள கழகத் தோழர்களுக்குத்தான், தி. மு. கழகத்தின் லட்சியத்தையும், கொள்கைகளையும் ஆந்திர, கன்னட, கேரள மக்களுக்கு எடுத்துச் சொல்லி, கழகத்திற்கு ஆக்கமும், ஆதரவும் தேடித் தர வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறது.

"இன்றைய தினம், தமிழகம் பெற்றிருக்கிற பகுத்தறிவு உணர்வை, கன்னட, கேரள, ஆந்திர மக்கள் பெற்றிருக்கவில்லை என்பது உணரத்தக்கது.

"தமிழகத்திலே, சமுதாயத்தைப் பிடித்திருக்கும் பிணிகள் எல்லாம் எடுத்து விளக்கப்பட்டு, பிணிகளுக்கான மருந்தும் சொல்லப்பட்டுள்ளன. இன்று, தமிழகத்தின் ஏறத்தாழ பெரும் பகுதி மக்கள் சமுதாய அறிவு பெற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

"இதர பகுதிகளில், தமிழகத்திலே சமுதாயப் பணி புரிந்த அளவு—யாரும் அக்கறையுடன அந்தப் பணியினை இதுவரை மேற்கொள்ளவில்லை ஒருசில, விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள், வேண்டுமானால், சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டியது குறித்து எடுத்துச் சொல்லியிருக்கலாம். எல்லா மக்களும்—குறைந்தது ஓரளவு எண்ணிக்கையுள்ள மக்களாவது—பழைமைப் பிடியிலிருந்து நீங்கி பகுத்தறிவு பெற்றவர்களாக மாறும் வகையில், தென்னாட்டின் இதர பகுதிகளில் சமுதாயப் பணி நடைபெறவில்லை."

இவ்வாறு, 10—7—54-ல், பொதட்டூர்பேட்டையில் நடைபெற்ற சித்தூர் மாவட்ட சமுதாய சீர்திருத்த மாநாட்டில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்:

'சித்தூர் மாவட்ட தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த அரசியல் மாநாடுகள் பொதட்டூர் பேட்டையில் நடைபெறுகின்றன.

இன்று நடைபெறும் இந்த சமூக சீர்திருத்த மாநாடு, இங்கே வதிகிற தமிழர்களிடையேயும் ஆந்திரர்களிடையேயும் நல்லதொரு பற்றையும், பாசத்தையும், அன்பையும் வளர்க்கவும், பெருக்கவும் பெரும் அளவு பயன்படும் என்று நம்புகிறேன்.

அந்தப் பணியினை வழக்கம் போல் தி. மு. கழகம் செய்ய முன்வந்திருக்கிறது இந்த ஆந்திரப் பகுதியில்.

தி. மு. கழகம், தொடர்ந்து சமுதாய பணி புரியவேண்டியதின் அவசியத்தை, எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது.

எந்த ஒரு அரசியல் பொருளாதார மாற்றமும், நிரந்தரமாக நீடித்திருக்க, மக்கள் உள்ளம் பண்பட்டிருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

வாளேந்திப் போலீசாரைத் தாக்கிய சன்யாசிகள்!

சன்யாசிகளை அடக்க ராணுவ போலீஸ்

கட்டாக்கில் ஒரு போலீசார் 2 சன்னியாசிகள் கொல்லப்பட்டனர்

கட்டாக், ஜூலை 18—

'கலியபோதாவில் உள்ள ஒரு மடத்தைச் சேர்ந்த சன்யாசிகளால் ஏற்பட்ட கலகத்தை ஒடுக்க ஒரிசா இராணுவப் போலீசார் தருவிக்கப்பட்டனர்."

ஒரு கிரிமினல் வழக்கு சம்மந்தமாக தேடப்பட்டு வந்த சிலரைக் கைது செய்ய போலீசார் சன்யாசிகளின் மடத்துக்குச் சென்றனர். மடத்திலிருந்த சன்யாசிகள் போலீசாரைத் தாக்கினர்களாம்!

போலீசார் நிலைமையைச் சமாளிக்கத் தடியடிப் பிரயோகம் செய்தனர். சன்யாசிகள் தடியடியினால் பின் தள்ளப்பட்டனர். பின்னர் அவர்கள் நீண்ட உடைவாள்களுடன் திரும்பிவந்து போலீசாரைத் தாக்கினர்கள்.

சன்யாசிகளின் தாக்குதலை முறியடிக்கப் போலீசார் கைத் துப்பாக்கிகளால் சுட்டனர். சன்யாசிகளின் கூட்டத்தைக் கலைக்க 6 கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் வெடிக்கப்பட்டன.

இக் கைகலப்பின் காரணமாக இரண்டு சன்யாசிகளும் ஒரு போலீஸ்காரரும் கொல்லப்பட்டனர். 6 போலீஸ் அதிகாரிகள் காயமுற்றனர்.

மடத்திலிருந்து ஏராளமான வேல்கள், அம்புகள், வாள் போன்ற பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

ஒரு அவில்தார், ஒரு கான்ஸ்டபிள் நிலைமைக் கவலைக்கிடமாக உள்ளதாம்.

காங்கிரீட் கட்டிடத்தைக் காலி செய்ய ம. பொ. சி.-க்குக் கட்டளை!

தனது கழகத்தை நக்கலைத்துவிட்டால் உள்ளே இருக்கலாம் என நிபந்தனை!

சென்னை, ஜூலை 18—

"காங்கிரஸ்காரர்கள் தமிழரசுக் கழகத்தில் உறுப்பினர்களாயிருக்கக் கூடாது. பதினைந்து நாட்களுக்குள் உறுப்பினர் பொறுப்பை ராஜினாமா செய்ய வேண்டும். இல்லாவிடில், காங்கிரசிலிருந்து தூரத்தப்படுவர்" என்று "காங்கிரஸ் எனது தாய் அதன் சேய் தமிழரசுக் கழகம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் 'அர்த்த நாரீஸ்வர' காங்கிரசாருக்கு 'கோட்டீஸ்' அனுப்ப தமிழ்நாடு காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. இம்முடிவை மேற்கொள்ள தமிழ் நாடு காங்கிரஸ் 'பூசாரிகளு'க்கு அகில இந்தியக் காங்கிரஸ் 'சாமி' பண்டித நேருவும் 'வரம்' தந்துவிட்டாராம்.

[குறிப்பு:—தோழர் ம. பொ. சி. காம் காங்கிரசில் இருக்கிறேன் என்ற எண்ணத்தில் காங்கிரசை ஒரு காங்கிரீட் கட்டிடம் என்று குறிப்பிட்டார் சின்னாட்களுக்கு முன். சொல்லி வாய் மூடுமுன் "மூடு உன் கழகத்தை—இன்றேல் காங்கிரசிலிருந்து உன் கடையைக் கட்டுவோம்" என்ற நாக்கு நீட்டியிருக்கிறது அவருக்கு. 'மதில் மேல் பூனை' யாயிருக்கும் ம. பொ. சி.-யார் என்ன செய்வாரோ?
—ஆசிரியர்]

நம் நாடு

சென்னை 19—7—54 திங்கள்

'ஆறுவது சினம்!'

★

சித்தூர் மாவட்டத்திலுள்ள பொதட்டூர்பேட்டையில், தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாடும், அரசியல் மாநாடும் சமீபத்தில் நடைபெற்றன. அம்மாநாட்டில் மக்களுக்கு காலஞ்சென்ற மாவீரன் பொட்டி சிராமுலு பெயர் வைக்கப்பட்டிருந்தது. அப்படி ஒரு ஆந்திரர் பெயரை வைக்கலாமென, பொதுவாழ்வின் புனிதத்தைக் காற்றில் பறக்கவிடுகிறதற்கென்றே, அரசியலில் நுழைந்துள்ள சில ஏடுகள், சிந்தித்துப் பாராமல், சீறுகின்றன!

மொழி வழியில் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர் காலஞ்சென்ற பொட்டி சிராமுலு. அவர் கொண்ட இலட்சியத்தின் வெற்றிக்காகவே, உண்ணாநோன்பிருந்து, உயிரை விலைகொடுத்து, உரிமையைப் பெற்ற உத்தமர். அதாவது, மொழி அடிப்படையில் ஆந்திர மாநிலத்தை உருவாக்குவதில், உயிரையே தியாகம் செய்து, டெல்லி ஆதிபத்தியத்தின் பிடிவாத குணத்தைப் பணிய வைத்தவர்!

சிராமுலு தந்த உயிர் பலிதான், நீண்டகாலக் கோரிக்கையான ஆந்திர மாநிலத்தை ஆந்திரர்களால் உடனடியாகப் பெற முடிந்தது. தங்கள் ஒரு … கோரிக்கையை ஆந்திர மக்கள் பெறுவது பொட்டி சிராமுலு, தம் உயிரையும் பணயம் வைக்கத் துணிவு கொள்ளுகிற வரையில், பொய் மான் வேட்டையாகத்தான் இருந்து வந்தது.

விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள உண்ணாநோன்பு இருப்பது நமக்கு உடன்பாடு இல்லையானாலும், ஒரு கொள்கைக்காக … தம் உயிரை இழக்கத் துணியும் துணிவை, … வெறியை, பாராட்டாமல் இருக்க முடியாது. தியாகத்தின் சிறப்பறிந்த எவரும், அந்தத் துணிவைப் போற்றத்தான் செய்வர். ஏதோ பொழுது போக்கிற்காகவும், சொந்தச் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், பொது வாழ்வைப் புகலாகக் கொண்டிருப்பவர்கள்தான், பொட்டி சிராமுலு புரிந்த இயக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டு, பழித்துத் தூற்றவும் முற்படுவர்!

மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற கொள்கையில் தி. மு. கழகத்திற்கு உடன்பாடு உண்டு. … இடையிய அடிப்படையில் ஒற்றுமை கொண்டு, பொது வாழ்வில் ஈடுபடுகிற … இல்லாதிருந்த போதிலும், … ஒன்றேயாகும். கொண்ட கொள்கைக்காக உயிரையும் தாரைவார்த்த வீரச் செயல், இருந்த பற்றின் மேலும் நம்மை உறுதி கொள்ளச் செய்தது.

எனவே, மாநாட்டுப் பந்தலுக்கு பொட்டி சிராமுலுவின் பெயர் சூட்டியதில் பொருள் இல்லாமலும் இல்லை; பிறர் சீறுவது போன்று பொருத்தமில்லாமலுமில்லை. அழுக்காறே உருவெடுத்து வந்தது போல் உள்ள அரசியல் சூதாடிகளுக்கு, இந்த உண்மை புரியாது; புரிந்தாலும், பூரிப்பளிக்காது போகும்; பொச்சரிப்பைத்தான் தோற்றுவிக்கும்!

சித்தூர் தமிழ்ப் பகுதி பிரச்சினையைக் குறித்து, நமது பொதுச் செயலாளர், பல கோணங்களிலிருந்தும், ஆராய்ந்து, சிறந்ததோர் விளக்கம் தந்துள்ளார். அதைக் கண்ணுறும் வாய்ப்புப் பெற்ற ஒவ்வொருவரும், பிரச்சினையின் தன்மையைச் சரிவரத் தெரிந்து கொண்டு, அதன் வெற்றிக்கான வழித்துறைகளைக் காண, முந்துவதுதான அறிவுடைமையாகும்.

அதை விடுத்து, சித்தூர் தமிழ்ப் பகுதி பற்றிப் பேச இவர்கள் யார்? எங்களுக்கல்லவோ அது 'காபிரைட்'? விட்டேனா பார்? என்றெல்லாம் ஆர்ப்பரிப்பது, பிரச்சினையில் வெற்றி பெறவும் வழி செய்யாது; கருத்தறிவித்தவர்களுக்கு காதொடிந்த ஊசியளவு கஷ்டமும் ஏற்படுத்தாது!

ஆனால், கொக்கரித்தவர்களுக்கு மட்டும் கொஞ்சம் மனச்சாந்தி ஏற்படும்; தம்மை ஞானாசிரியராகக் கருதிக் கொண்டிருக்கிறவர்களிடமிருந்து 'சபாஷ்' கிடைக்கக் கூடும். மேற் குறிப்பிட்ட இரண்டையும் பெறுவதுதான தங்களுடைய காழ்ப்பைக் … எனக் கருதுவதானால், அவர்கள் கொக்கரிப்பு அதைக் கொடுத்துவிட்டது என்பதை நாமும் ஒப்புகிறோம். அதுவுமல்லாமல், விரும்பியதை முழு அளவில் பெற்றுவிட்டமைக்காக அவர்களைப் பாராட்டவும் பாராட்டுகிறோம்!

சித்தூர் தமிழ்ப் பகுதி பற்றி நாம் தொடுக்கவேண்டிய போராட்டம் எல்லாம் டெல்லியுடன்தான், … அல்ல என்பதைப் பொதுச் செயலாளர் கூறி இருக்கிறார். மேற்படி பிரச்னையை ஆராய்ந்தறிய பாரபட்சமற்ற ஒரு எல்லைக் குழுவை நியமிக்க, டெல்லியை வற்புறுத்த வேண்டுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் கூறிய ஆலோசனையைக் காட்டிலும், நடைமுறைக்கு ஏற்றது வேறு இருப்பதாக, இந்தச் சூழ்நிலையில் சொல்வதற்கில்லை. நேரடி நடவடிக்கை, அறப்போர் என்பதெல்லாம், எல்லைக் குழுவின் முடிவிற்குக் கட்டுப்பட ஆந்திர சர்க்கார் மறுத்ததற்கு அப்புறம்தான் கருதப்பட வேண்டிய நடைமுறையாகும்.

அந்தக் கட்டத்திலுங்கூட போராட்டம் டெல்லி ஆதிபத்தியத்துடன்தானே அல்லாது ஆந்திர சர்க்காருடன் அல்ல என்பதை, மாநில சர்க்கார் அனைத்தையும் தட்டிக் கேட்கும் அதிகாரமும், பிணக்குத் தீர்க்கும் கடமையும் டெல்லி ஆதிபத்தியத்திடந்தான் சட்டப்படி உள்ளன என்பதை உணர்ந்துள்ளதால், பொதுச் செயலாளர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

இதே கருத்தினைத்தான் அப்படியே அன்பர் ம. பொ. சி. அவர்கள், சென்னை கூட்டத்தில் ஒப்புக்கொண்டு 'அறிவுரை' ஆற்றியுள்ளார்!

சித்தூர் சிக்கலை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு வழி தெரியாமல் 'இருளில் தவித்த' அன்பர் ம. பொ. சி, 'போர்! போர்!' என முரசு கொட்டிக் கொண்டிருக்கிறார். எல்லைக் குழு நியமிக்கப்படும் என அறிவிக்கும் நேருவின் கடிதம் 'இருளில் தவித்த நமக்கு ஒரு விளக்கு மாதிரி'' என அவரே கூறி அகமகிழ்கிறார்!

சித்தூர் பிரச்சினைக்கும் பரிகாரம் தேட வேண்டிய அதிகாரம் டெல்லியில்தான் இருக்கிறது என, நமது பொதுச்செயலாளர் கூறியதற்குக் கோபித்துக்கொண்ட அன்பர் ம. பொ. சி. அவர்கள், டெல்லி அதிபர் கூறிய ஆறுதல் மொழி கண்டு, மன இருள் நீங்கப் பெற்று களிநடம் புரிகிறார்!

"ஆந்திர முதல் மந்திரி பிரகாசம் ஒப்புக் கொள்ளாவிட்டால் மத்திய சர்க்கார் தலையிட்டுத் தீர்க்கவேண்டும்" எனவும் ம. பொ. சி. பறைசாற்றுகிறார்!

பிரகாசம் விரும்பினாலும் விரும்பாமல் போனாலும், சித்தூர் தமிழ்ப் பகுதிகளை விலக்கிவிடு எனக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் டெல்லிக்குத்தான் இருக்கிறது; அதனுடன்தான் நாம் போராட வேண்டுமேயல்லாது ஆந்திர பிரகாசத்துடன் போராடுவதாகக் கூறுவதும், போராடக் கிளம்புவதும் புத்திசாலித்தனமாகாது என, பொதுச் செயலாளர் பொதட்டூர்பேட்டையில் கூறியுள்ளார்.

இந்த அறிவுரை கண்டு ஆத்திரப்படும் அன்பர், டெல்லியின் தலையீட்டுக்கும் தீர்ப்பிற்கும் மனு போடுவது வியப்பாகத்தான் இருக்கிறது! டெல்லிக்கு அமைதியான முறையில் விண்ணப்பித்துக் கொள்ளுகிற அன்பர் ம. பொ. சி. அவர்களின் மனப்பாங்கு, ஆந்திர பிரகாசத்தை நினைத்தால் ஆத்திரம் கொள்ளுகிறது! போராட்டம் எனத் தோன்றுகிறது!!

அன்பர் அவர்களிடம் காணும் இந்த முரண்பாட்டைத்தான், நமது பொதுச் செயலாளர் அம்மாநாட்டில் … எடுத்துக் காட்டினார்.

உண்மையைக் கூறிவிட்டாரே என்பதற்காகவோ என்னவோ, அன்பர் குழாம் நமது கழகத்தினர் தலையை … கொய்து விடுகிறேன் பார் என அச்சுறுத்துகிறது!

நம்மை மிரட்ட முன்வரும் அச்சுறுத்தல் ஆசிரியருக்கு, ஆந்திர அரசாங்கத்தை, சித்தூர் தமிழ்ப் பகுதியிலிருந்து விரட்டியடிக்கும் வித்தைத் தெரிந்திருக்கவில்லை போலும்! அது போன்றே, டெல்லி ஆதிபத்தியத்தைப் பணியவைக்கும் மறத்தமிழ் மண்ணும் மருந்துக்கும் கிடைபாது போலும்!

பொட்டி சிராமுலு உயிர் கொடுத்தான், ஆந்திர மாநிலத்தைப் பெற்று, ஆந்திர மக்கள் அரசோச்ச! அது போல் சித்தூர் தமிழ்ப் பகுதிகளைத் தமதாக்கிக் கொள்ள, உயிரைக் காணிக்கையாக்க, ஆந்திரம் அமைக்கப்பட்ட போதே, எந்த 'மறத்தமிழ' ராவது முன்வந்திருந்தால் சிக்கலும் தீர்ந்துபோய் இருக்கும்; அன்பர் ம. பொ. சி அவர்கள் அடிக்கடி 'போர்! போர்!' என முரசம் தட்ட வேண்டிய வேலையும் இருந்திருக்காது!

அதைச் செய்யத் துணிவு கொள்ளாத மாவீரர்கள்தான், நமது கழகத்திற்கு அறைகூவல் விடுகிறார்கள், 'கந்தாலுக்குப் போய் பேசிப் பார்'; 'திருப்பதியில் மாநாடு நடத்திப் பார்!' என்று! அந்த இரண்டு இடங்களிலும் நாம் சென்று வெற்றி பெற்ற பிறகு, அவரும் அங்கு சென்று ஆவேசமாகப் பேசலாம் என நினைக்கிறார் போலும்!

கன்னட மொழி வழங்கும் பெல்லாரி நகரையும், அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளையும், ஆந்திர மாநில அமைப்பின் போதே, மைசூர் மாநிலத்துடன் இணைத்துவிடக் கட்டளை பிறப்பித்த, டெல்லி ஆதிபத்தியம், அப்பொழுதே, சித்தூர் தமிழ்ப் பகுதியையும் சென்னையுடன் சேர்த்திருக்க வேண்டும். வேண்டுமென்றே டெல்லி அவ்வாறு செய்யாதிருந்திருக்கிறது. அந்த அக்கிரமத்தைத் தெரிந்துகொண்டால்தான், சித்தூர் பிரச்சினைக்கு பரிகாரம் இருக்கும் இடம் டெல்லிதான் என்ற உண்மை விளக்கமாகும்.

அதை விடுத்து, மந்திரி பிரகாசத்துடன் 'போர்! போர்!!' எனக் கொக்கரிப்பது, கேலிக்கூத்து என்பதோடு மட்டுமல்லாது, கலகத்துக்கு வாதமும் ஆகும்.

இந்த உண்மையைத்தான் நமது பொதுச் செயலாளர் பொதட்டூர் பேட்டை மாநாட்டில் விளக்கினார். அதைக் கண்டு, நம்மீது தூற்றல் பாணம் தொடுப்பவர்களுக்கு 'ஆறுவது சினம்' என்ற ஔவையின் ஆத்திசூடியை, மீண்டும் ஒரு முறை படிக்குமாறு சிபாரிசு செய்கிறோம்!

இந்திய மிளகு ஆண்டுக்கு 24 கோடி தருகிறது

இந்தோனேஷியப் போட்டி வலுக்கிறது

பம்பாய், ஜூலை 16—

உலகில் மிக அதிகமான மிளகை உற்பத்தி செய்வது இந்தியாதான் என்று தெரிகிறது.

இத் துறையில், போதுமான அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்யாவிட்டால், இந்தோனேஷியா இந்த இடத்தைக் கைப்பற்றிவிடும் என்று தெரிகிறது.

இந்தியாவின் டாலர் வருமானத்துக்கு மிளகு சிறந்த இடம் பெற்றிருக்கிறது. இந்தியாவில் ஆண்டு தோறும் 20 000 டன் மிளகு உற்பத்தியாகிறது. 1952-53-ம் ஆண்டில் மிளகின் மூலம் இந்திய சர்க்காருக்கு ரூ. 20,7810 000 வருமானம் கிடைத்திருக்கிறதாம் 1951-52ல், இதன் மூலம் ரூ 24 கோடி கிடைத்திருக்கிறது.

சீனாவும் இந்தியாவிடமிருந்து 41 680 டன் மிளகை வாங்கியிருக்கிறது.

இந்தோனேஷியா மிளகு உற்பத்தி, மக்களின் வாழ்க்கையுடன் இணைந்துள்ளதாம்.

இந்தியாவுடன் அமெரிக்கா, இந்தோனேஷிய மிளகையும் வாங்குகிறதாம். இந்தியா, மிளகு வியாபாரத்தில் தன் இடத்தை இழக்காமல் இருக்க வேண்டுமானால், தக்க நடவடிக்கைகள் எடுப்பது அவசியம் என்று தெரிகிறது.

தி. மு. கழகத் தோழர்கள் மீது வழக்கு?

போலீசின் புரியாத போக்கு

சென்னை, ஜூலை 19—

சென்னை பெத்தநாய்க்கன் பேட்டையில், (8 வது வட்டம்) 15—7—54ல் மும்முனைப் போராட்ட நாள் கொண்டாடுவதின் முன்னிட்டு தெருக்களில் எழுதியதாக தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், டன்மொழியன், வானவரம்பன், இருட்டினசாமி, மதியாணன், ராமசந்திரன் முதலியவர்கள் கைது செய்யப்பட்டனர். தோழர் பன்மொழியன், வானவரம்பன் ஆகியோர்களுக்கு தலா ரூ 10 அபராதம் விதிக்கப்பட்டது. தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை சென்றனர் மற்ற தோழர்கள் வாதாடுகின்றனர். வழக்கு 22—7—54 வியாழக் கிழமை அன்று தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

பரிசு

[illegible] வரலாற்றையும் அவர் எழுதிய நூல்களையும் ரஷ்ய விஞ்ஞான கழகத்திற்கு இந்திய விஞ்ஞானிகள் சார்பில் கே. பி. எஸ். மேனன் பரிசளித்திருக்கிறார்.

ஆக்க வேலை செய்யவே அதிக மாணவர்கள் விரும்புகின்றனர்

கான்பூர் ஆராய்ச்சியில் கண்ட உண்மைகள்

கான்பூர், ஜூலை 18—

செகண்டரி பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையோர் விஞ்ஞானம், இனிய கலைகள் போன்றவைகளைக் கற்பதைக் காட்டிலும், ஆக்க வேலை செய்வதற்கான பயிற்சி பெறுவதையே விரும்புகிறார்களாம், கான்பூரில் உள்ள பிரதேச அமைப்பு நிலையம் ஒன்று நடத்திய ஆராய்ச்சியில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டதாகும்.

இந்த ஆராய்ச்சியில், 17.9 சதவீதத்தினர் விஞ்ஞானத்தையும், 23.5 சதவீத மாணவர்கள் இலக்கிய பாடங்களையும் விரும்புகிறார்கள் என்றும், ஆக்க வேலைப் பயிற்சி பெற 30 சதவீதத்தினர் விரும்புகின்றனர் என்றும், இனிய கலைகளைப் பயில 12.2 சதவீத மாணவர்களே விரும்புகின்றனர் என்றும் தெரியவந்தது.

மீதி உள்ள மாணவர்கள் உயர்தரப் படிப்புக்குத் தகுதியில்லாதவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

மாநாடு

சென்னை மாநில கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் மாநாடு மதுரையில் ஆகஸ்டு 7-ம் தேதி நடைபெறும் என்று தெரிகிறது.

தில்லை தீட்சிதர்களுக்கு யோகம்!

—(:)—

திருப்பனந்தாள் மடத்தின் தாராளம்!

அனுதினமும் 16 பூசுரர்களுக்கு அன்னதானம்

ரூபாய் ஒன்றரை இலட்சம் நிலம் மூலதனமாம்!

சிதம்பரம், ஜூலை 15—

தில்லை நடராசர் ஆலயத்தில் உள்ள தீட்சிதர்களின் இலவச உணவிற்காக திருப்பனந்தாள் காசி மடத்தின் அதிபரான அருள்நந்தித் தம்பிரான் ஒன்றரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலங்களை மூலதனமாக நிறுவியிருக்கிறார்.

இதன் மூலம், நடராசரின் 'தேவசபை' அம்மன் கோவில் பாண்டியநாயகம் கோவில் இவைகளில், முறைப்படி பூஜை செய்யும் பூசுரர்கள் 16 பேருக்கு தினந்தோறும் இலவசமாக உணவு அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் ஆரம்ப விழா அறுசுவை உணவுடன் ஜூலை 15-ம் தேதி ஆரம்பமாயது.

சிதம்பரத்தில் இந்த 16 பூசுரர்களுக்கும் உணவு இலவசமாக அளிக்க மாதம் ஒன்றுக்கு ரூ 300 செலவாகும் என்று தெரிகிறது.

இலவச உணவு தினமும் அளிக்கப்படும் என்ற செய்தி கேட்டு தில்லையின் 'தேவ தூதர்கள்' அளவில்லா மகிழ்ச்சி அடைந்திருக்கின்றனர்.

திருப்பனந்தாள் மடத்து அதிபரின் இந்த அன்னதான சேவையை சிதம்பரத்து அந்தணர்கள் அனைவரும் மனமாரப் பாராட்டுகின்றனர் என்று தெரிகிறது.

கடலூர் அருகே எண்ணெய் கிடைக்கிறதா?

கடலூர், ஜூலை 16—

திருப்பாதிரிப்புலியூர் அருகே குழாய் கிணறு ஒன்றில் 65 அடி ஆழத்திலும் தண்ணீர் வரவில்லையாம்.

பின்னர் மாதகள் அவ்வழியே சென்ற ஒருவர் அக்கிணற்றின் உள்ளே தீக்குச்சியை கிழித்துப் போட்டுத் தண்ணீர் வருகிறதா என்று பார்த்தாராம்.

உடனே குழாயில் தீப்பிடித்துக் கொண்டதாம்.

தீயணைப்புப் படை வந்தும் அணைக்க முடியவில்லை பிறகு குழாயில் தண்ணீர் ஏற்பட்டு வாயைக் கோணியில் போட்டு மூடினர்.

இவ்விடத்தில் கந்தகம் அல்லது எண்ணெய் கிடைக்குமென்று நம்பப்படுகிறது.

சென்னை பொறி இயல் கல்லூரிகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள்

சென்னை, ஜூலை 16—

சென்னை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் உள்ள சர்க்கார் பொறி இயல் கல்லூரிகளில், மொத்தம் 186 மாணவர்கள் கல்வி பெற சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவினர் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

இவர்களில் அகதிகள் 2 பேரும், இலங்கையினர் 2 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 17 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். பிற்பட்ட வகுப்பினர் 83 பேரும், முற்பட்ட இதர வகுப்பினரில் 82 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் விவரம் பின் வருமாறு:—

சென்னை மாவட்டம் (16) மு. வ. 8; பி. வ. 8

செங்கற்பட்டு (8) மு. வ. 6; பி. வ. 2.

வடார்க்காடு (13) மு. வ. 5; பி. வ. 8

தென் ஆர்க்காடு (12) மு. வ. 7; பி. வ. 5.

தஞ்சை (13) மு. வ. 8; பி. வ. 5

திருச்சி மாவட்டம் (13) மு. வ. 7; பி. வ. 6

மதுரை மாவட்டம் (13) மு. வ. 5; பி. வ. 8

இராமநாதபுரம் (9) மு. வ. 4; பி. வ. 5

திருநெல்வேலி மாவட்டம் (11) மு. வ. 7; பி. வ. 3; தா. வ. 1.

கோவை (14) மு. வ. 6; பி. வ. 8

சேலம் மாவட்டம் (14) மு. வ. 2; பி. வ. 12.

மலபார் (21) மு. வ. 12; பி. வ. 9.

தென்கன்னடம் (7) மு. வ. 4; பி. வ. 3

நீலகிரி (2) மு. வ. 1; பி. வ. 1.

ஜெர்மனியின் போலீஸ் பலம்

பிரிட்டிஷ் சர்க்காரின் வெள்ளையறிக்கை தரும் புள்ளி விவரங்கள்

லண்டன், ஜூலை 16—

கிழக்கு ஜெர்மனியின் ஆயுதம் தரித்த போலீசார் 80,000-லிருந்து 85,000 பேர் இருப்பார்கள் என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தப் போலீசாரை இராணுவத்தினர் என்றே கூறிவிடலாம். அவற்றில் இரண்டு சோவியத் வாயின் பிரிவுகளும், இரண்டு தரைப் படைப் பிரிவுகளும், ஒரு இயந்திரப் படைப் பிரிவும் இருக்கின்றன என்று தெரிகிறது.

போர்த் தளவாடங்களும், டாங்குகள் போன்றவைகளும் ஏராளமாக உள்ளனவாம்.

1,300 டாங்கிகள் 1,300 விமான, டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகள் ஆகியவைகளும் உள்ளனவாம்.

கடற் படைப் போலீசார் 6,000 பேர் உள்ளனராம். இவர்களிடம் 30 சிறு படகுகளும், கடற்படைத் தளவாடங்களும் உள்ளனவாம்.

சோவியத் விமானிகளிடம் பயிற்சி பெற்ற 7,500 விமானப் போலீசார் கிழக்கு ஜெர்மனியில் உள்ளனர் என்று வெள்ளை அறிக்கை கூறுகிறது.

நிலையல்லாத பிண்டல்களுடன் 55,000 சிவில் போலீசாரும், 25,000 எல்லைப் போலீசாரும், 12,000 விசேஷப் போலீசாரும் உள்ளனராம்.

கிழக்கு ஜெர்மனி ரஷ்யர்களின் ஆதிக்கத்தில் உள்ள நாடு. மேற்கு ஜெர்மனியில் பெஷின் துப்பாக்கிகள், 50 லகச மோட்டார்கள், பிண்டல்கள் வைத்திருக்கும் போலீசார், கடற்படைப் போலீசார், எல்லை போலீஸ் படை உள்பட 10,000 பேர் உள்ளனர் என்று அந்த வெள்ளை அறிக்கை கூறுகிறது.

அப்பாக்கிகளுடன் 90,000 சிவில் போலீசார் உள்ளனராம்.

மேற்கு ஜெர்மனியில் 450 பேருக்கு ஒரு போலீசார் விதமும், கிழக்கு ஜெர்மனியில் 100 பேருக்கு ஒரு போலீசார் விதமும் உள்ளனர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

கொரியப் போரின்போதுதான் ஜெர்மனி பிளவுபட்டிருப்பதில் உள்ள அபாயமும் ஜெர்மனியைப் பலப்படுத்துவது அப்புக்கொள்ள வேண்டிய பிரச்சினை என்பதும் உணரப்பட்டதாம்.

சோவியத் அதிகாரிகள் கிழக்கு ஜெர்மனியை இராணுவமயமாக்கிய பின்னர்தான், மேற்கு ஜெர்மனியின் இராணுவம் பற்றிய பேச்சு எழுந்தது என்று வெள்ளை அறிக்கை கூறுகிறது.

இப்போதும் ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் வெற்றியைப் பொறுத்துதான் நிலைமையில் மாற்றம் ஏற்பட இருக்கிறது. இன்னும் மே. ஜெர்மனியை இராணுவமயமாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.

வெள்ளை அறிக்கையின் மீது பிரிட்டிஷ் பாராளுமன்றம் விவாதிக்கும் என்று தெரிகிறது.

அக்டோபரில் இலங்கை-இந்தியர்கள் தாயகம் திரும்புவார்கள்!

முதலில் 5,000 பேர் வருவர்

இரண்டு ஆண்டுகளில் 25,000 பேர் வெளியேற்றப்படுவர்

இலங்கையின் அக்கிரமத்துக்கு இந்தியத் தூதுவர் தேசாய் ஒப்புதல்

கொழும்பு, ஜூலை 16—

இலங்கையில் தற்காலிக வாசப் பர்மிட்டுகள் வைத்திருக்கும் 25,000 இந்தியர்களை வெளியேற்றிவிட, இலங்கை அரசு முடிவு செய்துவிட்டது. இதற்காக நடைபெற்ற இலங்கை அமைச்சர்கள், அதிகாரிகள் மாநாட்டில் இலங்கை இந்தியத் தூதுவர் தேசாய் கலந்துகொண்டார். அவர் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொண்டாராம்!

இலங்கையில் 70,000 இந்தியர்கள் தற்காலிக வாசப் பர்மிட்டுகளுடன் வசிக்கின்றனர். இவர்களில் 25,000 பேர்களுடைய பர்மிட்டுகளை புதுப்பிக்க வேண்டும். அவைகளைப் புதுப்பிக்காது, அவர்களை இந்தியாவுக்கு ஐந்து தடவைகளில் அனுப்ப இலங்கை சர்க்கார் முடிவு செய்துவிட்டனர்.

வருகிற அக்டோபரில் 5,000 பேர் இந்தியாவுக்குத் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் புறப்படுவார்கள் என்று இலங்கை அரசாங்கம் அறிவிக்கிறது. இவர்களில் பெரும்பான்மையோர் கடைச் சிப்பந்திகளும், வீட்டு வேலைக்காரர்களுமாவார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் இந்தியா வந்த உடன் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் துவங்க தகுதியில்லாதவர்கள் எனலாம்.

இந்த 25,000 பேர்கள் எவ்வளவு காலத்திற்குள் வெளியேற்றப்படுவர் என்று குறிப்பிடவில்லை. இரண்டு ஆண்டுகளில் வெளியேற்றப்படலாம் என்று சர்க்கார் மதிப்பிட்டிருக்கிறதாம்.

இவர்கள் அனைவரும் மூன்றுமாத கால முன்அறிவிப்பின் பேரில் இந்தியாவுக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள் என்று தெரிகிறது.

மூன்று பெண்களுக்கு விஷமிட்டுக் கொன்ற பெண்

மரண தண்டனை விதிக்கப்பட்டாள்

புதுடில்லி, ஜூலை 15—

மூன்று வாலிபப் பெண்களை விஷமிட்டுக் கொலை செய்ததாக ரத்தன்பாய் ஜெயின் என்ற 35 வயதுப் பெண்ணுக்கு இன்று டில்லி அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

டில்லியில் மலடிப் பெண்களின் வியாதிகளுக்குச் சிகிச்சை செய்யும் இரு நிலையங்களை எதிரி நடத்திவந்தாராம்.

அப்பெண்கள் தன் கணவனுடன் கொண்டிருந்த உறவு காரணமாகப் பொறாமை கொண்டு இக்கொலையில் ஈடுபட்டாள் என்பது பிராசிகியூஷன் வாதமாம்.

'பிரிட்டிஷார் அடக்குமுறையை காங்கிரசார் வெட்கமின்றிப் பின்பற்றுகின்றனர்!

—(:)—

உ.பி. முன்னாள் அமைச்சர் குற்றச்சாட்டு

எதிர்க் கட்சிகளைக் காங்கிரஸ் ஒடுக்க முனைகிறது என்கிறார்!

ஆக்ரா, ஜூலை 15—

"சுதந்திர விரும்பிகள் அனைவரும், உத்திரப் பிரதேச சர்க்காரின் அடக்குமுறைக் கொள்கையை, ஒருமித்த குரலில் கண்டிக்க வேண்டுமென்று, உ. பி. முன்னாள் நிதி அமைச்சர் எஸ். கே. டி. பலிவால், மதுராவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்."

மதுரா நகர ஐக்கிய முன்னணியின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பிரஜா - சோஷலிஸ்டுகள், ஜன சங்கம், ராம் ராஜ்ய பரிஷத் ஆகிய இயக்கங்கள் கலந்து கொண்டன.

உ. பி.யில் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐக்கிய முன்னணியுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

"எந்த பிரிட்டிஷாரின் அடக்குமுறையையும், அவர்களது கறுப்புச் சட்டங்களையும் எதிர்த்துப் போராடிய காரணத்திற்காக பண்டித நேரு, பண்டித பந்த் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் சிந்தனைக்குள்ளானார்களோ, கலகக்காரர்கள் சட்டத்தை மதியாதோர் என்று அழைக்கப்பட்டார்களோ, இன்று, அதே தலைவர்கள், எதிர்க் கட்சிகளை ஒடுக்க அதே அடக்குமுறைகளை, வெட்கமின்றி கையாளுகின்றனர். இந்த அடக்குமுறைகளெல்லாம் 'சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கிறோம்' என்ற பொய்ம் போர்வையில் நடைபெறுகின்றன."

என்று, பலிவால் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"உத்தரப் பிரதேசத்தில் பிரஜா-சோஷலிஸ்டு கட்சி சட்டத்தை மீறுகிறது என்று குற்றம் சாட்டுகிறார்கள். அந்த நேரத்தில் திரு—கொச்சியில் சட்டத்தை மீற காங்கிரஸ்காரர்கள் வெளிப்படையாகவே ஆதரிக்கின்றனர். ஆகவே, சட்டம்—ஒழுங்கு இவைகளின் பெயரால் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு இரண்டு விதக் கொள்கைகளைக் கடைபிடிக்கின்றனர்."

நன்றி

"12—7—54ல், சிவகாசியில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் எனக்கும் தோழியர் பேச்சியம்மாளுக்கும் நடந்த திருமணத்திற்கு வாழ்த்துத் தந்திகள் அனுப்பிவைத்த எல்லோருக்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று தோழர் என். கே. கிருஷ்ணராஜ அறிவிக்கிறார்.

புவனகிரியில் தி. மு. க. பொதுக் கூட்டம்

4—7—54 மாலை 6 மணிக்கு புவனகிரி ஆற்று மணலில் தோழர் பொ. சொக்கலிங்கம் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. லால்பேட்டை தோழர் வா. க. இராமலிங்கம் கழக குறிக்கோள்களை விளக்கிப் பேசினார்.

உலக அரங்கில்

தைப்பே :
பார்மோசாவை ஐ. நா. சபையின் அங்கத்தினர் குழுவின் ஆட்சியின் கீழ் வைக்கவேண்டுமென்று பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் கூறியதை தேசிய சீன அமைச்சர் ஒருவர் கண்டித்திருக்கிறார்.

தெஹ்ரான் :
பாக்—துருக்கி ஒப்பந்தம் பற்றி சோவியத் சர்க்கார் அனுப்பிய கண்டனக் குறிப்புக்கு ஈரான் சர்க்கார் பதில் அனுப்பியிருக்கிறது. தனது கௌரவத்தைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈரான் இறங்காது என்று அந்தப் பதிலில் கூறப்பட்டிருக்கிறதாம்.

ஹெல்சிங்கி :
பாகிஸ்தான் வெளிநாட்டு விவகார அமைச்சர் சாபருல்லாகான் ஸ்காண்டிநேவிய நாடுகளில் இப்போது சுற்றுப்பயணம் செய்கிறார். அவர் இப்போது ஹெல்சிங்கி நகரம் வந்து சேர்ந்திருக்கிறார்.

இரங்கூன் :
பர்மாவில் அமுல் செய்யப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டில் வளர்ச்சி ஏற்படாது என்று பர்மியப் பிரதமர் யூ-நு கூறியிருக்கிறார். பர்மிய மந்திரி சபை பர்மாவின் 1954-55 வரவு செலவு திட்டத்தைப் பரிசீலனை செய்யும் போதுதான் யூ-நு இவ்வாறு கூறினார்.

லண்டன் :
மத்திய ஆசியாவின் தட்பவெப்ப நிலையை மாற்றியமைக்க 1948-ல் ருஷ்யாவில் அமுல் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட 'ஸ்டாலின் திட்டம்' பற்றி ஸ்டாலினின் மரணத்திற்குப் பின் எந்த விபரமும் தெரியவில்லை என்று ருஷ்ய விஞ்ஞானிகள் கூறுகிறார்களாம்.

* * *

போக்குவரத்துத் தொழிலாளர்களின் உலக பெடரேஷன் கூட்டமொன்றில் ஜப்பானியப் பிரதிநிதியான கிஷிமாகி, பிக்கினி தீவில் அமெரிக்க அணுகுண்டு சோதனை நடந்ததைக் கண்டித்துப் பேசினார். இந்த தொழிலாளர் கழகத்தில் 30 நாடுகளிலிருந்து 300 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பெல்கிரேட் :
பால்கன் இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகாமல் காலதாமதப்படுவதற்கு காரணம் தான் என்னும் கிரேக்க குற்றச்சாட்டை மறுத்து டிட்டோ கிரீக பிரதமர் பாபகோஸுக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

வாஷிங்டன் :
அமெரிக்க மேல் சபையான செனட் சபையில் வெளிநாட்டு விவகாரக் கமிட்டி [illegible] ஏற்படுத்துவதை எதிர்க்கும் தீர்மானம் ஒன்றை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது என்று தெரிகிறது.

பெர்லின் :
மேற்கு ஜெர்மனியில் உள்ள அமெரிக்கப் படை ஒன்று அமெரிக்க அதிகாரிகளின் அனுமதியின்றி [illegible] போர்க்களை எதிர்த்தது, கிழக்கு ஜெர்மனியில் அமெரிக்க புலிப்படை [illegible] செய்திருக்கிறதாம்.

ஜெனீவா :
இந்தோ சீன யுத்த நிறுத்தம் குறித்து உலகப்பெரும் [illegible] ஐ.நா. சபையின் பொருளாதாரக் கழகத்தில் ருஷ்யா தீர்மானம் ஒன்றை பிரேரேபித்திருக்கிறது.

டோக்கியோ :
கிழக்கு, வடக்கு ஜப்பானில் இரண்டு நிமிட நேரம் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டதாம். சில கட்டடங்கள் நாசமாயின என்று தெரிகிறது.

பாங்காக் :
தாய்லாந்திற்கும் — மலேயா எல்லைகளுக்கிடையே உள்ள சீன பயங்கரவாதிகளை வெளியேற்றும் நோக்குடன் தாய்லாந்து சர்க்கார், அப்பகுதியில் உள்ள வெளிநாட்டார் அனைவரும் வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது.

மாஸ்கோ :
இந்த ஆண்டில் சோவியத் நிபுணர்கள் பலர் இந்தியாவுக்குச் சென்று தொழில் நுணுக்க உதவி அளிக்க கொள்கை அளவில் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக இந்திய புள்ளிவிவர கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பி. சி. மகலானோபிஸ் தெரிவித்திருக்கிறார். இவர் இந்திய விஞ்ஞானிகளுடன் ருஷ்யாவில் சுற்றுப்பயணம் செய்கிறார்.

லிஸ்பன் :
12 ஆண்டுகள் அரசியல் வாழ்வில் கலந்துகொள்ளக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட கோவாவின் அரசியல் தலைவரான டாக்டர் பி. கய்தாண்டே, சர்க்கார் அனுமதிக்குமென்றால் தான் லிஸ்பன் நகரில் வாழத் தயார் என்று கூறியிருக்கிறார்.

கெய்ரோ :
எகிப்திய பாதுகாப்பு அதிகாரிகள் இரகசிய கம்யூனிஸ்டு அமைப்பு ஒன்றைக் கண்டுபிடித்து அழித்துவிட்டனர். இது சம்பந்தமாய் 23 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டு ஏராளமான கம்யூனிஸ்டு பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிகிறது.

வாஷிங்டன் :
லிபியாவின் பிரதமர் முஸ்தபாவுக்கும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லசுக்கும் இடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகள் முடிவடைந்துவிட்டன என்று தெரிகிறது. அமெரிக்கப் பொருளாதார உதவிக்காக, லிபியாவில் அமெரிக்க தளங்களை அனுமதிக்கும் 20 ஆண்டுகால ஒப்பந்தம் ஒன்று தயாராகிவிட்டது என்று தெரிகிறது.

நைரோபி :
பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர்களை கொன்ற மௌ மௌ பயங்கரவாதி [illegible] கைது செய்யப்பட்டார் என்று தெரிகிறது.

லண்டன் :
ஆகாகான் தமது குதிரைப் பந்தய அலுவல்களைக் குறைத்துக் கொண்டு வருகிறார். அவர் தமது குதிரைகளில் 21ஐ அமெரிக்காவில் விற்க ஏற்பாடு செய்வார் என்று தெரிகிறது.

கொழும்பு :
இலங்கையின் கடைசி பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் லார்ட் சோல்பரி தமது பதவியை விட்டு தாய்நாடு புறப்பட்டார். இலங்கையின் முதல் சிங்கள கவர்னர் ஜெனரலாக ஆலிவர் குணதிலகா பதவி ஏற்றார்.

* * *

இலங்கை மந்திரி சபையின் ஆலோசகராக இருந்த ஐ வர்த்தக [illegible] பற்றி செய்திகள் தரும் வெளியீடுகள் என்று [illegible] அனுமதியுடன் இலங்கையில் பிரசுரிக்கப்பட்டு போலீசாரால் சோதனையிடப்பட்டன.

செய்கோன் :
அந்நாட்டுக்கான இந்தோசீனா [illegible] ஜெனிவா திட்டத்தை எதிர்த்து நகர சபை கட்டடத்துக்கு எதிரே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நெடுஞ்செழியன் கருத்துரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் விடுதலை ஒரு சமுதாயத்திற்கு, தனக்குத் தேவையானவற்றைச் செய்து கொள்கிற வாய்ப்பைத் தரலாம்.

பொருளாதார விடுதலை, ஒரு சமுதாயத்திற்கு, அதிகமாக வாழ்க்கை வசதிகளைத் தரலாம்.

ஆனால், ஒரு சமுதாயம், அறிவுத் தெளிவும், நெஞ்சு உரமும் கொண்டதாக இருக்க வேண்டுமானால் அந்தச் சமுதாய மக்களின் மனம், எதையும் பகுத்தறிவுடன் சிந்திக்கும் ஆற்றல் கொண்டதாகப் பண்படுத்தப்பட்டதாக வேண்டும்.

அறிவுத் தெளிவும், நெஞ்சு உரமும் கொண்டதாக ஒரு சமுதாயம் ஆகுமானால் அந்தச் சமுதாயம் விரும்புகிற எந்த ஒரு மாற்றத்தையும்—அரசியல், பொருளாதார மாற்றங்களையும்—மிக எளிதில் பெற்றுக் கொள்ள முடியும்.

இது கருதித்தான், வள்ளுவப் பெருந்தகை, "அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்" என்று குறிப்பிட்டார்.

இந்த நாட்டிலே, மக்களின் அறிவு, ஆற்றல், உழைப்பு நேரம், பிணைப்பு அத்தனையும் அவர்களுக்கு எந்தவகையிலும் பயன்படாத, மத புராண, கடவுட் துறைகளுக்குச் செலவிடப்படுகிறது.

அப்படி இருந்தால், இந்த நாட்டு மக்கள் சுகமாக வாழ்கின்றனரா?

ஆயிரக்கணக்கான ஆண்டவர்களையும், அவர்களுடன் தொடர்பு கொள்ள ஒரு புரோகிதக் கூட்டத்தையும் வைத்துக் கொண்டிருக்கிற இந்த நாட்டவரின் சராசரி வருமானம் எவ்வளவு தெரியுமா?

இங்கே உள்ள, அழகப்பச் செட்டியார், முத்தையாச் செட்டியார், அண்ணாமலைச் செட்டியார், ராமநாதபுரம் ராஜா இன்னும் இப்படிப்பட்ட பலப்பல பணக்காரர்களுடையவும் சாதாரண நடுத்தர வர்க்கத்தினருடையவும், இன்னும், பஞ்சைகளாய் பராரிகளாய், பிச்சைக்காரர்களாய்த் திரிபவர்களுடையவும் வருமானத்தை எல்லாம் சேர்த்து, வகுத்துப் பார்த்தால் இந்த நாட்டு மகன் ஒவ்வொருவனுடையவும் சராசரி வருமானம்—365 நாட்களையுடைய ஒரு வருடத்திற்கு—255 ரூபாய்! ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்கூடக் கிடைக்கவில்லை, சராசரியாக ஒரு மனிதனுக்கு இந்த இழிநிலையில்—தாழ்நிலையில் இருக்கும் இந்த நாட்டு மக்கள்தான், ஆண்டவனுக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கோவிலும் கோபுரமும் கோலாகல வாழ்வும் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆண்டவர்கள், தங்கள் வாழ்வையும், வளத்தையும், அதிகப்படுத்துவான் என்ற மூட நம்பிக்கையால்?

இந்த மூடநம்பிக்கை, மக்கள் மனதிலிருந்து அகற்றப்பட வேண்டாமா?"—என்று தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் கேட்டார்.

தொடர்ந்து அவர், இந்த நாட்டில் மக்கள் மனதில் ஊறிப் போயிருக்கிற கடவுள் நம்பிக்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களும், மத, புராண இதிகாச எண்ணங்களும், எவ்வாறு அவர்களுக்கு வாழ்வதற்கு கிஞ்சிற்றும் பயன்படாது என்பதை, சான்றுகளுடன் விளக்கிக் காட்டிய அடைன் மக்கள் பகுத்தறிவு பெற்றவர்களாக மாற வேண்டியதின் அவசியம் குறித்தும், மேலை நாட்டு மக்கள் வாழ்வில் பெற்றிருக்கிற முன்னேற்றங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியும், அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தனது சொற்பொழிவில், தோழர் நெடுஞ்செழியன் "இந்த நாட்டிலே உள்ள கடவுள்களும், அவைகளின் அருள் பெற ஏற்பட்டுள்ள மதங்களும், அவைகளின் உயர்வும் புராணங்களும், அந்தப் புராணங்களின் பெருமை கூறி, பறை வாசடி வதைத்து, தாங்கள் வாடாது வாழும், வஞ்சகரும், மக்கள் வாழ்வதை, சுயமாக சிந்தித்து 'எது நல்லது எது கெட்டது' என்று தெரிந்து, அவ்வழி நடப்பதினின்றும் தடுத்து நிற்கின்றன" என்பதை மிகத் தெளிவாக தக்க உதாரணங்களுடன், உயர் தனிச் செம்மொழிச் சொல்லாடல் மூலம் விளக்கினார்.

செங்கற்பட்டு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்

காஞ்சிபுரத்தில் 18-7-54ல் நடைபெற்றது

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் திராவிட நடு அலுவலகத்தில் 18—7—54 காலை செயற்குழுக் கூட்டம் 10 மணிக்கு நடைபெற்றது. உறுப்பினர்கள் 26 பேர் வந்திருந்தார்கள். பார்வையாளர்களும் பெருந்திரளாக வந்திருந்தார்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு, மாவட்ட மாநாட்டைக் குறித்து தோழர்கள்; காஞ்சி கல்யாணசுந்தரம், பி. சிவானந்தம் ஆகியவர்கள் விளக்கிப் பேசினார்கள். மாநாட்டை 1954 ஆண்டு மாதம் 21, 22 தேதிகளில் காஞ்சிபுரத்தில் நடத்துவதென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. தோழர் சி. வி. எம். அண்ணாமலை வரவேற்புக் குழுத் தலைவராகவும், தோழர்கள்: டி. சபாபதி, என். வி. பெருமாள் செயலாளர்களாகவும், ஆர். வடிவு பொருளாளராகவும், தொண்டர் படைத் தலைவர் என். ஏ. ஹைறப், இ. சந்திரசேகரி, டி. ராஜரத்தினம் ஆகியவர்களையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சமூக சீர்திருத்த மாநாட்டுக்கு தலைவராக கவிஞர் என். என். கிருஷ்ணன் அவர்களையும், திறப்பாளராக சுனைசித்திர நடிகர் தோழர் எம். வி. இராமச்சந்திரன் அவர்களையும் கேட்டுக் கொள்வதென்றும், அரசியல் மாநாட்டிற்குத் தலைவராக அந்தக்குடி தோழர் ஆர். எம். தங்கப்பழம் அவர்களையும் திறப்பாளராக தோழர் எம். எஸ். மணி (திருச்சி) அவர்களையும் முறையே கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் பிற்பகல் 2-30 மணிக்கு முடிவுற்றது.

நியமனம்

சென்னை சர்க்கார் சட்ட இலாகா காரியதரிசியாக ஏ. அனந்தசாமி நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

செய்திக்கதிர்

ஆட்சேபம்
அமெரிக்காவின் மட்டமான புத்தகங்கள் பல இந்தியப் புத்தகக் கடைகளில் குவிந்து கிடப்பதை இந்தியாவில் கல்வி பயில வந்துள்ள அமெரிக்க மாணவர்களில் சிலர் கண்டித்துள்ளனர்.

பட்டு உற்பத்தி
பட்டு விசைத்தறி தொழிலைக் கட்டுப்படுத்துமாறு, சென்னை, மத்திய அரசாங்கங்களைக் கேட்டுக் கொள்வதென்று அய்யம்பேட்டைக் கைத்தறி நெசவாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

நீர் வினியோகம்
இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேலம் நீர் வினியோகத் திட்டத்தை சேர்த்துக் கொண்டு அவ்வேலையை முடிக்க தொகையையும் அனுமதிக்குமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு சேலம் நகரசபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

தடை
[illegible] காந்தி என்று [illegible] சமத்துவத்துக்கு இதுவரை [illegible] என்ற இடத்தை விட்டு வெளியேற [illegible] அரசாங்கம் தடை விதித்துள்ளது.

ஆசிரமப்பள்ளி
பம்பாய் மாகாணத்துடன் இணைக்கப்பட்ட பிரதேசங்களின் பின் தங்கிய பூர்வீகக் குடிமக்களுக்காக புது முறையில் ஆசிரமப் பள்ளிக்கூடங்களைத் தொடங்க இராஜ்ய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

அபினி
இந்தூர் அருகே ஜோரா என்ற நகரில் ஒரு வீட்டிலிருந்து மத்திய பாரத போலீசார் சோதனையிட்டு ரூ 3 இலட்சம் மதிப்புள்ள 7 மணங்கு 30 சேர் அபினியை கைப்பற்றினார்கள்.

இராஜினாமா
திரு. கொ. காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாதவன் நாயர், தி. த. நா. கா. தலைவர்களான நேசமணி, அப்துல் ரசாக், சிதம்பரநாடார் ஆகியோரை சிறையில் சந்தித்து சமரசம் பேசியதை ஆட்சேபித்து சமீபத்தில் பின்னர் தனது காரியக் கமிட்டி உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டார்.

கழகக் கூட்டம்
பாங்கிப்பேட்டை
சஞ்சீவிராயர் கோவில்தெருவில்
20—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. சுப்பிரமணியம்
பேசுவோர்:
இரா. இளம்வழுதி
ப. உ. சண்முகம்

நாடகம்
21—7—54 இரவு 10-30 மணிக்கு, வேலாயுதம் பகல் [illegible] நிதிக்காக வள்ளுவர் கலா மன்றத்தாரால், இடைப்பாடி அசோகா நாடக ஆர்ட்ஸ் தோழர் கே. ஆர். ராமசாமி தலைமையிலும், தோழர் கண்ணதாசன் முன்னிலையிலும் தோழர் கே. ஜி. இராதாமணாளன் எழுதிய 'அரசு மாளிகை' நாடகம் நடைபெறும்.

[illegible] தோழர் இரா. இளஞ்செழியன், எம். [illegible] அச்சகத்தில் அச்சிட்டு [illegible] வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. [illegible]